# புறநானூறு சாற்றும் சங்ககால மக்களின் வழிபடு கடவுளர்

# The Deities of Sangam People Through Purananuru

பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன்
Professor Dr. M. Rajantheran[1]
துணைப்பேராசிரியர் முனைவர் சில்லாழி
Assistant Professor Dr.Silllalee[2]

**Abstract**

The ancient pieces of literature of Tamil People are Tholkappium and Sangam literature. Sangam literature is classified into two such as Pathupattu and Ettruthohai. Further, these come under two divisions called Aham and Puram, which speak about personal and social life respectively. Purananuru deals chiefly the social life of the Tamil People. It includes Kingship, Justice, Warfare, Commerce, Trade, Business, Art, Communities, beliefs, rituals, food, shelter, attire and so on. Purananuru deals with the Tamil deities, nature of worhsip and faith. Even the first song of Purananuru centers around Lord Shiva and also many poems deal with the Primary god of Tamils Lord Muruga, Vishnu, Indiran, Yama, Kannan. It does not stop with gods. It talks also about karpaha virutcham, kamadhenu and nectar in heaven. In a nut shell, Purananuru helps us to understand the life and culture of ancient tamil people.

**Key Words** : Purananuru, Sangam literature, gods of Tamil People, beliefs, Semiotics

## முன்னுரை

தமிழில் தொல்காப்பியம், சங்க இலக்கியம் ஆகியவற்றைப் பழைய இலக்கியம் என்று கூறுவது மரபாகும் (மாணிக்கம், *1989*, p.*1*). இவற்றுள் சங்க இலக்கியம் என்பது பொதுவில் எட்டுத்தொகை (நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு) பத்துப்பாட்டு (திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம், நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை) ஆகிய இலக்கியப் படைப்புத் தொகுப்புகளையே குறிக்கும். எட்டுத்தொகை என்பது தனித் தனிப் பாடல்களின் தொகுப்பாக இருக்க, பத்துப்பாட்டு என்பது நீண்ட பத்து

[1] The author is a Professor in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rajantheran@gmail.com
[2] The author is an Assistant Professor in the Department of Modern Languages, University Tunku Abdul Rahman, Kajang, Malaysia. silllalee@yahoo.com

பாடல்களின் தொகுப்பாக உள்ளது. ஆக சங்க இலக்கியம் என்பது எட்டுத்தொகை, பத்துப் பாட்டு சேர மொத்தம் ஒன்பது தொகை நூல்களைக் குறிப்பதாகும் (இராசேந்திரன், *2014*, p.10).

மேலும், சங்க இலக்கியத்தின் பொருள் பாகுபாடு அகம், புறம் என இரு பெரும் பிரிவாக பகுக்கப்பட்டுள்ளது. இப்பகுப்பானது கூட உலக இலக்கியங்கள் வேறு எதிலும் காணக் கிடைக்காத ஒர் அரிய செய்தியாகும். பொதுவாகக் காதல் பற்றிய அன்புணர்ச்சியின் உள்ளக் கிடக்கையை அகம் என்றும் வகுத்தனர் (ஞானசம்பந்தன், *1955*, pp.*23*).

புறப்பாடல்கள் பொது விழுமியங்களைப் பாடும் பாடல்களாகும். கண்ணால் கண்டு வாயால் விளக்கிச் சொல்லக் கூடியவைகளை புறப்பொருள் இலக்கியங்களாகப் பகுத்துள்ளனர். புறப்பொருளில் பண்டைத் தமிழர்தம் அரசாட்சி, நீதிமுறை, போர்ச் செய்திகள், வணிகம், தொழில்கள், கலைகள் போன்ற பல செய்திகளையும் காணலாம். இவை முழுமையும் பொது வாழ்வை மையமாகக் வைத்துப் பேசப்படும் பாடல்களாக அமைகின்றன (இராசேந்திரன் - சில்லாழி, *2015*, p.*8*).

இவ்வாறு புறப்பொருளைப் பற்றிப் பேசக்கூடிய இலக்கியங்களுள் புறநானூறு தனிச்சிறப்புடையது. இத்தொகுப்பின் சில பாடல்கள் குறிப்பாக இரண்டாம் பாட்டு தொல்காப்பியத்திற்கும் முந்தைய காலத்திற்குரியதாக இருத்தல் வேண்டும் என்பதாகக் கருத்து உள்ளது. இதில், பழந்தமிழரின் வாழ்க்கை எவ்வாறு அமைந்தது என்பதற்கான அரிய பல செய்திகள் உள்ளன (Nazir Ali, 2016, p.17). இவற்றுள் பழந்தமிழரின் வழிபடு கடவுளர்களைப் பற்றிய குறிப்புகளும் ஆங்காங்கே காணக்கிடைக்கின்றன.

## ஆய்வு முன்னோடிகள்

சங்க இலக்கிய நூலாகிய புறநானூறு குறிந்த பல நூல்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ளன. இவை நேரடியாகப் புறநானூற்றின் தொகுப்பாகவும், சில புறநானூற்றுப் பாடலுடன் விளக்க உரையை உடையதாகவும், மேலும் சில புறநானூற்றுச் சிந்தனைகளை உள்ளடக்கிய ஆய்வுக் கட்டுரைகளாகவும், இன்ன பிற நூல்கள் மற்ற சங்க இலக்கியங்களுடன் சேர்த்துப் படைக்கப்பட்ட நூல்களாகவும் வெளிவந்துள்ளன.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரின் புறநானூற்றுச் சொற்பொழிவுகள் எனும் நூல் **19.2.1944**இல் நடைபெற்ற புறநானூற்று மாநாட்டினை ஒட்டி வெளியீடு செய்யப்பட்டதாகும். அறிஞர் ரா.பி. சேதுப்பிள்ளை உள்ளிட்ட பல அறிஞர்களின் அரிய படைப்புகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. புறநானூற்றைப் பொருத்த வரையில் இந்நூல் மிகப் பெரிய வரப்பிரசாதமாக அமைந்தது எனலாம். பின்வந்த ஆய்வுகள் பலவுக்கும் இந்நூலின் பங்களிப்பு பரவலாக இருந்திருக்கிறது என்றும் சொல்லலாம்.

அ.ச.ஞானசம்பந்தன் அவர்களின் அகமும் புறமும் (புறம்) எனும் நூல் பாரி நிலையத்தாரால் *1955*இல் வெளியீடு கண்டது. இந்நூல் இலக்கியத்தில் வரலாறு, நாட்டு வளமும் மக்கள் வளமும், தமிழர் கண்ட அரசு, தமிழர் கண்ட அமைச்சன், தமிழர் கண்ட உண்மைகள் எனும் தலைப்புகளைக் கொண்ட இயல்களால் அமையப் பெற்றிருக்கிறது. இந்நூல் ஆய்வுக் கண்ணோட்டத்தோடு படைக்கப்பட்ட தொடக்க நூல்களுள் ஒன்று எனலாம். ஆய்வாளர்களுக்கு உதவக் கூடிய இந்நூல் தற்போதைய ஆய்வுக்கும் பயனாக அமைந்தது.

அடுத்து, ஔவை துரைசாமிப் பிள்ளை அவர்களின் புறநானூற்றுக்கான உரைநூல் சென்னை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நூல் புறநானூறு குறித்த மிகச் சிறந்த விளக்கங்களை அளிக்கின்றது.

புறநானூற்றை ஆய்வு செய்யப்புகும் எந்த ஒருவருக்கும் அதன் அடிப்படைச் செய்திகளை நெறிதவறாது அறிவிக்கும் நூலாக இந்த நூலைத் தயக்கமின்றிச் சொல்லலாம்.

அதுபோலவே சென்னை உமா பதிப்பகத்தாரால் வெளியீடு செய்யப்பட்டுள்ள ஞா.மாணிக்கவாசம் அவர்களின் புறநானூறு மூலமும் உரையும் எனும் நூலும் புறநானூறு குறித்த தெளிவான விளக்கவுரையை அளிப்பதாகவே அமைந்துள்ளது. இது போலவே, நியூ சென்சுரி புக் ஹௌஸ்சின் வெளியீடாக வந்துள்ள புறநானூறு மூலமும் உரையும் எனும் நூல் தற்போதைய பயன்பாட்டிற்கு மிகச் சிறந்ததொரு நூலாக அமைகின்றது. இந்நூலில் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்களின் அணிந்துரை பல அரிய தகவல்களைக் கொண்டுள்ளதோடு மட்டுமன்றி, படிப்போருக்கு நல்ல பின்புல அறிவையும் ஊட்டுவதாக அமைந்துள்ளது. இந்நூலில் இடம்பெற்றுள்ள உரையானது துறை விளக்கம், உரை, உரை விளக்கம், அருஞ்சொற்பொருள் என நன்குப் பிரிவுகளில் ஒவ்வொரு பாடலுக்கும் விளக்கம் தருவது மிகவும் பயனுடையதாகவும், புறநானூற்றை மிகவும் எளிய முறையில் புரிந்து கொள்வதற்கும் வாய்ப்பாக அமைகிறது.

ப.மருதநயகம் அவர்களின் புதுப் பார்வைகளில் புறநனூறு எனும் நூல் 16 தலைப்புகளில் எழுதப்பட்டுள்ள கட்டுரைகளின் தொகுப்பாக அமைந்துள்ளது. இவற்றுள் 11 கட்டுரைகள், 11 வகையான ஆய்வுக் கோட்பாடுகளின் அடிப்படையில் புறநானூற்றுப் பாடல்களை ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டவையாக அமைகின்றன. சங்க இலக்கிய நூல்களை, நவீன ஆய்வு நெறி, கொள்கைகள் கொண்டு எவ்வாறு ஆய்வு செய்யலாம் என்பதற்கு நல்ல எடுத்துக் காட்டாக இந்நூலைச் சொல்லலாம்.

டாக்டர். ந. சுப்ரமண்யனின், சங்க கால வாழ்வியல்: சங்கத் தமிழரின் அரசு முறையும் சமூக வாழ்வும் எனும் நூல் சங்க இலக்கியம் குறித்து எழுந்த ஆய்வு நூல்களுள் குறிப்பிடத்தக்கது. இது அரசு முறையும் சமூக வாழ்வும் காட்ட வந்த நூல் ஆகையால், பெருவாரியாக புறப் பொருள் சார்ந்த சங்க நூல்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. அவ்வகையில் பழந்தமிழர்தம் பண்பாட்டுக் கருவூலமாகக் கருதப் பெறும் புறநானூற்றின் குறிப்புகள் இந்நூலில் பரந்து காணப்படுகிறது.

இந்த நூலுக்கு ஒப்ப கைலாசபதி அவர்களின் Tamil Heroic Poetry எனும் நூலும் புறநானூற்று ஆய்வுக்குப் பெரும் துணை புரியக் கூடிய ஒரு நூலாகும். இது புறப்பொருள் பாடும் சங்க நூல்களின் ஒட்டுமொத்த கருத்தை, அரிய ஆய்வுத் திறத்தால் வெளிப்படுத்திய நூல் என்று கூறலாம்.

இவற்றோடு அ.தட்சிணாமூர்த்தியின் தமிழர் நாகரீகமும் பண்பாடும், சாலினி இளந்திரையனின் சங்கத் தமிழரின் மனிதநேய மணிநெறிகள், வ.சுப.பாணிக்கம் இயற்றிய சங்க நெறி ஆகிய நூல்களும் தற்போதைய ஆய்வு முன்னோடிகளுள் மிக முக்கிய நூல்களாக விளங்குகின்றன. இவை யாவும் தற்போதைய ஆய்வை ஆழ்ந்து மேற்கொள்வதற்குப் பல வகையிலும் உறுதுணை புரிந்துள்ளன.

## ஆய்வு நெறி / கோட்பாடு

இக்கட்டுரை தரப்பகுப்பாய்வு (qualitative) நெறியை முன்னிருத்தி ஆய்வு செய்யப்பட்டுள்ளது. பொதுவில் இலக்கியங்களில் வெளிப்படும் சமூகவியல் கூறுகளை ஆய்வு செய்வதற்கு இந்தத் தரப்பகுப்பாய்வு நெறி பயன்படுத்தப்படுகிறது (Sabitha Marican, 2005, p.12). இந்நெறியின் மூலம் ஓர் இலக்கியத்தின் உள்ளடக்கப் பொருள்களையும் அதன் ஆழ்நிலைக் கருத்துகளையும் எளிதில் கண்டறிய இயலும் (Merrian, 2009, p.2). தற்போதைய ஆய்வும் சங்க இலக்கியத்தில் வெளிப்படும் கடவுளர்களைப் பற்றிய ஆய்வு ஆதலால்

இந்த ஆய்வு. நெறி தற்போதைய ஆய்வுக்கு உற்ற நெறியாக அமைந்துள்ளது.

பொதுவில் கோட்பாடு எனப்படுவது உலகியல், சமூகவியல் போன்றவற்றை பற்றிய அடிப்படைச் சிந்தனைகளை ஆய்வுப் பூர்வமாக முன்வைப்பவை எனப்படுகின்றது (Lawrence Neuman, 2007, p.24). கோட்பாட்டின் வழி பெறப்படும் அனுமானங்களானவை ஓர் ஆய்வில் எத்தகைய வெளிப்பாடுகள் அல்லது கண்டுபிடிப்புகள் காணக்கிடக்கலாம் என்பதைப் பற்றிய முன்னோட்டமாக அமையும். அதே வேளையில் ஒரு சூழலை முன்னிருத்தி ஓர் ஆய்வில் தோன்றும் பல்வேறு கேள்விகளுக்கும் விடை காபீக் கோட்பாடு வழிவகுக்கும் என்பர் (Bailey, 1978, p.32). அந்த வகையில் தற்போதைய ஆய்வில் குறியீட்டுக் கோட்பாடு சங்க இலக்கியங்களில் மறைபொருளாக வெளிப்படுத்தப்பட்ட கடவுளர்களைப் பற்றிய செய்திகளை கண்டறிவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

குறீட்டுக் கோட்பாடானது ஒரு பொருளைக் குறியீடாகக் கண்ணுற்று, அதன் அடிப்படையில் அதில் வெளிப்படுகின்ற பல்வேறு விளக்கங்களை முன்வைப்பதாகவே அமைகின்றது (Innis, 1985, p.vii). எந்த ஒன்றையும் குறியீடாகக் காணும் போதே அது குறித்த விளக்கங்களும் இயற்கையாகத் தோன்றும். மேலும் இக்குறியீடு பல்வேறு கோணங்களில் காணப்படும் போது பல விதமான விளக்கங்களையும் உருவாக்கம் செய்யும். சில வேளைகளில் ஒரு குறியீடு குறித்த விளக்கமானது அக்குறியீட்டுப் பொருளைப் பற்றிய உண்மை விளக்கத்தையும் கடந்து புதிய பல விளக்கங்களையும் முன்வைக்க ஆய்வாளருக்கு முழுச் சுதந்திரத்தையும் கொடுக்கின்றது (Albert Sebeok, 1994, p.34).

மேலும், இக்கோட்பாட்டினைக் கொண்டு சமூகத்தில் நிகழும் செயல்பாடுகளைக் குறியீடாகக் காணும் போது அதில் உள்ள தெரிநிலை விளக்கங்களோடு "புதைநிலை விளக்கங்களையும் கண்டறியலாம் (Albert Sebeok, 1994, p.3). இதனால் அந்த இனத்தில் சமூகவியல் செயல்பாடுகள் எத்துணை தூர நாகரீகப் பண்பாட்டிற்கு உட்பட்டது என்பதுவும் அதனால் பெறப்படும் விளக்கங்கள் உணர்த்திவிடும்.

மேற்கூறிய விளக்கத்தின் அடிப்படையில் குறியீட்டுக் கோட்பாடானது ஒரு கருத்தைக் குறியீட்டில் நிறுத்தி, அதனைப் பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்து அதன் செயல்பாடுகளையும் விளக்கங்களையும் உணர்வதற்கு வகை செய்யும் என்பதனை அறிய முடிகின்றது. இச்சிந்தனையின் அடிப்படையில் இக்கோட்பாட்டினைக் கொண்டு சங்க இலக்கியமாகிய புறநானூற்றுப் பாடல்களில் தெரிநிலையிலும் புதைநிலையிலும் வெளிப்படும் செய்திகளைக் குறியீடாகக் கண்டு அதன் மூலம் பெறப்படும் சங்ககால மக்களின் வழிபடு கடவுளர்களைப் பற்றித் தற்போதைய கட்டுரை ஆய்வு செய்கிறது.

## தமிழரின் வழிபடு கடவுளார்

தமிழரின் வழிபடு கடவுளர் குறித்த செய்திகளும் அவர்கள் உறைந்த கோயில்கள் பற்றிய குறிப்புகளும் புறநானூற்றில் காணக் கிடைக்கின்றன. பொதுவில் பழந்தமிழர் ஐந்திணைகளுக்கும் தனித் தனியே உரிய தெய்வங்களைப் போற்றியது, பெருங்கடவுளாகச் சிவபெருமானைப் போற்றியது அறியப்படுகின்றது. சங்க காலத்தில் கோவில்களிலும் (புறம் 6), கடற்கரையிலும் (புறம் 55), ஆலமரம் போன்ற மரங்களிலும் (புறம் 199) கடவுளர்களின் வழிபாடு நிகழ்ந்ததான செய்திகள் கூறப்படுகின்றன.

### சிவபெருமான்

புறநானூற்றின் முதல் பாடலிலேயே இறைவனின் (சிவபெருமான்) திருக்கோலம் குறித்த குறிப்புகள் இருப்பதைக் காண முடிகின்றது. இப்பாடலைப் பாரதம் பாடிய

பெருந்தேவனார் பாடியுள்ளார். இறைவன் தன் திருமுடியில் சூட்டியுள்ள மாலை கார்காலத்தில் மலரும் மணம் பொருந்திய கொன்றைப் பூவால் ஆனது. அவர்தம் திருமார்பு மாலையும் கொன்றை மலராலேயே தொடுக்கப்பட்டுள்ளது. இறைவனுக்கு ஊர்தியாக வெள்ளை எருது அமைந்திருப்பது தெரிகிறது. அந்த வெள்ளை எருதே அவர்தம் கொடிச்சின்னமாகவும் விளங்குகின்றது. நஞ்சினைத் தம் கண்டத்தில் தாங்கியதால் அவருடைய கழுத்து அழகு பெற்று விளங்குகிறது. இந்நீலகண்டத்தை வேதம் பயிலும் அந்தணர்கள் போற்றிப் புகழ்கின்றனர். இறைவனானவன் இவ்வாறாகத் தோன்றித் தெரியும் திருவுருவத்தினை மறைத்து நிற்கும் ஆற்றலும் உள்ளவன். நிலவின் இளம்பிறை இறைவனின் திருநெற்றியை அலங்கரிக்கின்றது. அந்தச் சிறப்பால் இப்பிறையானது பதினெண் கணங்களாலும் புகழ்ந்து பாடப்பட்டது. இக்கூற்றினை சம்பந்தர் தேவாரத்தில் 'தூவெண் மதிசூடி' (ஒன்றாம் திருமுறை: பாடல்:1) எனும் வரியினால் அறியலாம். இது இறைவனின் கருணைக்கு உற்ற உதாரணம். இது தட்சனின் சாபத்தால் தேய்ந்து கரைந்த சந்திரனை சிவப்பரம்பொருள் தம் தலை மேல் சூடிக் காத்தப் பெருங்கருணையைக் குறிப்பது ஆகும் (இராசேந்திரன் - சில்லாழி, *2015*, p.*31*).

எல்லா உயிர்களுக்கும் இறைவனே காவல்காரனாக விளங்குகிறான். இறைவன் தாழ்ந்த திருச்சடையும், அரிய தவக்கோலமும் உடையவனாக விளங்குகின்றான் எனும் குறிப்புகள் தெளிவாகக் காணக் கிடக்கின்றன. இதே திருத்தோற்றக் குறிப்பினை ஔவை பாடிய

'பால் புரை பிறை நுதற் பொழிந்த சென்னி,
நீலமணி மிடற்று ஒருவன் போல

(புறம் *91*).

பாடல் வரிகள் காட்டுகின்றன. இதன்வழி இறைவன் பால் போன்ற வெண்மையான அழகிய பிறையணிந்த நெற்றியுடன் மிகப் பொலிவுற்ற திருமுடியையும், விடம் உண்டதால் நீலநிறம் ஏறிநின்று அது மணி போல் ஒளிவிடும் கரிய கழுத்தினையும் உடைய ஒருவனே ஆன சிவபெருமான் என்பதாகப் பொருள்படுகிறது. கொடிய விடத்தைத் தான் ஏற்று உலக மக்களுக்கு அருள் புரியும் சிவபெருமானின் கருணையை அதியமானின் கருணை உள்ளத்திற்கு உவமையாகப் பாடுகின்ற வகையில் ஔவையார் இதனைக் குறிப்பிடுகின்றார். இதன் உட்பொருள் மன்னனும் இத்தகைய பெருங்கருணையுடன் இருத்தல் வேண்டும் என்பதே ஆகும்.

பிறிதொரு பாடலில் காரிக்கிழார் (புறம் *6*), பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் வெண்கொற்றக் கொடையானது சிவபெருமானின் திருக்கோயிலை வலம் வருவதற்கு ஏற்ப தாழ்த்திப் பிடித்த செய்தியை முன்வைக்கிறார். இதே பாடலில் சிவபெருமான் முனிவர்களால் வணங்கப்பெறும் முக்கட்செல்வராகக் குறிப்பிடப்படுகிறார். இவரது உலகம் ஆகாயத்தைக் கடந்து அதற்கும் மேலான பகுதியில் அமைந்திருப்பதாகவும் இப்பாடலில் குறிப்பு வருகிறது. இக்கூற்று சங்ககாலத்திலேயே சிவபெருமான் பெருங்கடவுளாக வழிபட்டமையையும் சிவபெருமானுக்கான கோவில்கள் இருந்ததையும் சுட்டுவதாக அமைந்துள்ளது.

பாண்டியன் இளவந்திகை பள்ளித் துஞ்சிய நன்மாறனை மதுரை மருதன் இளநாகனார் பாடிய புறநானூற்றின் *55*வது பாடலில் சிவபெருமானின் திருவிளையாடல்களுள் ஒன்றாகிய முப்புரம் எரித்த செய்தி காணக்கிடக்கின்றது. அறத்தை நிலைநிறுத்தும் இறையின் மறக்கருணைக்கு ஒப்ப மன்னன் நடுநிலையில் நின்று கோலோச்ச வேண்டும் என்று கூறுமிடத்து இச்செய்தி உவமையாக வருகின்றது. இப்பாடலின் தொடக்கத்திலேயே உயர்ந்த மேருமலையை வில்லாகவும் வாசுகிப்பாம்பினை

நாணாகவும் திருமாலை அம்பாகவும் கொண்டு திரிபுர அசுரர்களின் முப்புரங்களையும் அழித்து அமரர்க்கு வெற்றி தந்த செய்தி பேசப்படுகின்றது (புறம் 55). இப்பாடலிலும் இறைவன் தான் விடமுண்டு கண்டம் கருமை கொண்ட கருணையையும் அந்தப் பெருமானின் அழகிய திருமுடியில் துலங்குகின்ற பிறையையும் சொல்லி சிவனின் நெற்றிக்கண் போல மூவேந்தருள் உயர்ந்தவனே என அரசனை உயர்த்திப் பாடும் வகையில் சிவபெருமான் குறித்த செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்விடத்தில் சிவபெருமானின் நெற்றிக்கண்ணானது ஞானத்தின் அடையாளமாகவும் அக்கண்ணின் தீப்பொறியானது காமனை எரித்தது எனும் செய்தியையும் பெறப்படுகிறது (Kali Prasad Goswami, 1998, 48). இதன் அடிப்படையில் காணும் போது சிவபெருமான் காம இச்சைக்கு அப்பாற்பட்டவனாக இருத்தல் போன்றே மன்னனும் தனது நீதி நெறியான ஆட்சியில் பெண் மோகத்திற்கு இடம் கொடாமல் செங்கோல் செலுத்தல் வேண்டும் எனும் கூற்றையும் புலவர் முன்னிருத்துவதாகப் பொருள் கொள்வது பிழையாகாது. அதே வேளையில் இப்பாடல் சங்க மக்களிடத்தே காமன் எனும் தெய்வ வழிபாடு இருந்தமையையும் அவனுக்கும் மேலான கடவுளராகச் சிவபெருமான் இருந்தமையையும் முன்வைப்பதை அறிய முடிகிறது (நடராஜா, 1983, p.73).

அரச பெருமக்கள் பெருவாரியாக நீள்சடையுடைய முது முதல்வனை (சிவபெருமானின்) முதற்கடவுளாகப் போற்றித் துதித்துச் சிவவழியிலேயே சென்றதாகக் குறிப்பு கிடைக்கின்றது (புறம் 166). இதன் வழி சிவபெருமானின் திருவுருவப் பொலிவு, மறக்கருணைகள் போன்றவை மட்டுமன்றி அரசர்கள் சிவனது வழியே நின்று நல்லாட்சி நல்கினர் என்பதுவும் பெறப்படும்.

## முருகப்பெருமான்

சிவபெருமானைப் போலவே முருக வழிபாடும் பழந்தமிழரின் தொன்மை வழிபாடாக விளங்கியுள்ளது என்பதைத் திருமுருகாற்றுப்படை எனும் சங்க நூல் ஒன்றை மட்டும் கொண்டே நிறுவலாம் (வரதராசன், 1992, p.53). மேலும் சங்க இலக்கியங்கள் முருகப்பெருமானைச் சேயோன் என்றும் குறிஞ்சி நிலக் கடவுள் என்றும் பல இடங்களில் போற்றிய செய்தி பழந்தமிழரிடத்தே முருக வழிபாடு குறித்த செய்தியை ஆதாரப்பூர்வமாகவே நிறுவுகிறது (தேவபூபதி நடராஜா, 2011, p.17). புறநானூற்றைப் பொருத்த வரையில் முருகனுக்குக் கோவில் இருந்த செய்தி பொன்முடியார் பாடிய பாடலில் குறிக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தும் முருகன் பற்றிய செய்தி ஒப்புவமையாகக் கையாளப்பட்டுள்ளது. இப்பாடலில் முருகன் கோவிலுக்குச் செல்வோர் உடல் தூய்மையும், உள்ளத்தூய்மையும் கொண்டிருக்க வேண்டும் என்பதும், பெண்கள் வீட்டுக்கு விலக்காக இருக்கும் காலங்களில் அக்கோயில்களுக்குள் இருக்கும் பொருள்களைத் தொடுவதற்கும் அஞ்சினர் என்ற செய்தியையும் அறிய முடிகின்றது (புறம் 299).

பிறிதொரு பாடலில் (புறம் 55), ஆழமான நீர்ப்பரப்பையும் வெண்மையான அலைகளையும் மேற்பரப்பாக உடைய செந்திலம்பதி எனப்படும் அழகிய அகன்ற கடற்கரையின் திருச்செந்தூரில் முருகவேளின் கோயில் அமைந்திருக்கின்ற செய்தி சொல்லப்படுகின்றது. இவ்விடத்தில், மதுரை மருதன் இளநாகனார் திருச்செந்தூர் கடற்கரையில் குவிந்து கிடக்கும் மணல் மேடுகளில் இருக்கும் மணலின் எண்ணிக்கையிலும் பலகாலம் வாழ்வாயாக எனப் பாண்டியன் இலவந்திகை பள்ளித் துஞ்சிய நன்மாறனை வாழ்த்தும் வகையில் அமைந்துள்ளது. பொதுவில் புலவர்கள் மக்களுக்கு நன்கு பரிச்சியமான ஒன்றைத்தான் உதாரணமாகக் கையாள்வது

வழக்கம். அந்த வகையில் முருக வழிபாடு சங்ககால மக்களிடையே புகழ்பெற்ற வழிபாடாக இருந்த செய்தி இதன் வழி அறியப்படுகிறது.

வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் புறநானூற்றின் 125வது பாடலில் சோழருக்குத் துணையாக இருந்து தேர்வண் மலையனைப் பாராட்டும் பொருட்டு பெருமழைக்கு இருப்பிடமாக அமைந்திருக்கும் உயர்ந்த மலைகளையுடைய திருபொருந்திய முருகக் கடவுளுக்கு ஒப்பாவாய் என ஒப்பிட்டுக் கூறுமிடத்து, முருகக் கடவுளைச் சுட்டுகிறார். இதன் அடிப்படையில் முருக வழிபாடும் திருக்கோவில்களும் பழந்தமிழ் மக்கள் மத்தியில் மிகத் தொன்மைக் காலத்திலிருந்தே புகழ் பெற்றிருந்தமை அறியப்படுகிறது.

இதுமட்டுமல்லாது முருகப்பெருமான் குறித்த புராணச் செய்திகள் கூட மக்கள் மத்தியில் பரவியிருந்தமைக்குச் சான்றாகக் கல்லாடனார் பாடிய புறநானூற்றுப் பாடலைக் காட்டலாம் (புறம் 23). இப்பாடலில் முருகன் பசிய கடம்ப இலைகளுடன் சேர்த்துக் கட்டப்பட மலர்மாலையை உடையவனாகவும், சூரபதுமனைக் கூறு செய்தவனாகவும் சுட்டப்பெறுகிறான். இது போலவே புறநானூற்றின் 16வது பாடலில் ‘முருகற் சீற்றத்து’ எனும் குறிப்பால் முருகவேள் கொள்ளும் சினத்தைப் போல நீயும் சினம் கொண்டதால் பகைவர்களுக்கு அது பெரும் அச்சத்தைத் தரவல்லதாக இருந்தது என்பதாக சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியின் ஆவேசத்தை முருகனின் சினத்திற்கு ஒப்பிட்டுப் பாடுகிறார் பாண்டரங்கண்ணனார்.

பிறிதொரு இடத்தில் கோடை பாடிய பெரும்பூதனார் ஆனிரைக் கவரச் செல்லும் மன்னனுக்கு அறிவுரை கூறும் முகமாக புறநானூற்றின் 259வது பாடலில் ‘முருகுமெய்ப் பட்ட புலத்தி போல, தாவுபு தெறிக்கும் ஆன்மேல்’ எனும் வரிகளால் தெய்வம் வந்து (முருகன்) தன் மேல் வந்து இறங்கி வெறியாடும் புலச்சி போலக் கட்டுக்கடங்காமல் ஆனிரைகள் துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கின்றன. அதுவல்லாது அந்நாட்டு வீரர்களும் வருவாரை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருக்கின்றனர். எனவே இது ஆனிரை கவர்வதற்குரிய பொருத்தமான நேரமல்ல; அதனைத் தவிர்ப்பாயாக எனக் கூறும் அறவுரைக்கு உதாரணம் கூற வந்த இடத்தில் புலவர் இவ்வாறு பாடுகின்றார். இவ்வாறு முருகப்பெருமான் குறித்த செய்திகள் புறநானூற்றில் உவமை அடிப்படையில் வருவது அறியப்பட்ட போதிலும் இவை அனைத்தும் பழந்தமிழரிடத்தே முருகவழிபாடு இருந்ததற்கான தொன்மையினைச் சுட்டுவதாகவே அமைவதை அறிய வகை செய்வதாகக் கொள்ளலாம்.

## திருமால்

மாயோன் வழிபாடாகக் கூறப்படும் திருமால் வழிபாடு பழந்தமிழரின் தொன்மை வழிபாடுகளுள் ஒன்று என்பது அறிந்த செய்தியே. முல்லை நிலத்துக் கடவுள் திருமால் எனத் தொல்காப்பியம் சாற்றும் (அகத்திணை: 5). திருமால் வழிபாடு குறித்த செய்திகளும் புறநானூற்றில் காணக் கிடைக்கின்றன. புறநானூற்றின் 174வது பாடலில் அவுணரால் கவர்ந்து செல்லப்பட்ட சூரியனைக் கருவண்ணம் கொண்ட திருமால் அவுணரை அழித்து சூரியனை மீட்டுக் கொடுத்து உலகைக் காத்த பெருமை கூறப்பட்டுள்ளது. இவ்விடத்தில் திருமால் காக்கும் கடவுள். சூரியனாரைக் காக்க அவுணரை வதம் செய்த திருமாலின் செயலானது அவர் காக்கும் கடவுள் என்பதையும் இந்நம்பிக்கை பழந்தமிழர் வாழ்க்கையில் நிலைபெற்ற ஒன்றாக இருந்துள்ளது என்பதையும் மேற்கண்ட பாடலின் வழி நிறுவப்படுவதை அறிய முடிகின்றது.

இது போலவே நக்கீரர் பாட்டுடைத் தலைவரின் பெருமையைச் சிவபெருமான் முதலான கடவுளர்களுடன் ஒப்புவமை கூறிப் பாடும் பாடலில் 'வலி ஒத்தியே, வலியோனை; புகழ் ஒத்தியே இகழுநர் அடுநனை' (புறம் 56) என்று குறிப்பிடுகின்றார். இவ்விடத்தே கண்ணனையும் அவர் அண்ணன் பலராமனையும் சேர்த்துப் புகழும் குறிப்பு வருகிறது. பலராமரைக் குறிப்பிடும் போது அவரை வலியவர் என்றும் கண்ணனைக் குறிப்பிடும் போது புகழ் மிக்கவர் என்றும் சாற்றுகின்றார். இதுவும் திருமால் வழிபாடு தென்னகத்தில் நிலைபெற்று இருந்தமைக்குச் சான்றாகின்றது.

மேலும் புறநானூற்றின் 198வது பாடலில், வடமவண்ணக்கண் பேரிசாத்தனார் 'ஆல்அமர் கடவுள் அன்னநின் செல்வம்' என்னும் குறிப்பினைக் கூறுகின்றார். இக்குறிப்பும் திருமால் வழிபாட்டைக் குறிப்பதாகவே காணப்படுகின்றது. திருமால் ஆல் இலையில் பள்ளி கொண்ட கூற்றும், அவர் செல்வத்தின் அதிபதியாகிய திருமகளின் நாகயன் எனும் கருத்தையும் முன்வைத்து இதனைத் திருமால் வழிபாடு எனக் கொள்ளலாம். அதே வேளையில் ஆல்அமர் எனும் சொல்லானது ஆலமரத்தில் அமர்ந்து சனகாதி முனிவர்களுக்கு உபதேசிக்கும் சிவபெருமானின் தட்சணாமூர்த்தித் திருக்கோலம் என எண்ணுவதும் பிழையாகாது. இதன் வழியும் திருமால், சிவ வழிபாடுகள் பழந்தமிழரிடத்தில் இருந்தமை உணர்த்தப்படிகின்றது. இவற்றோடு, திருமாலின் தேவியாகப் போற்றப்படும் திருமகள் வழிபாடும் பழந்தமிழரிடையே இருந்தமை இப்பாடலின் வழி அறியப்படுகிறது.

## இந்திரனும் தேவர்களும்

புறநானூற்றில் தேவர்களின் தலைவனான இந்திரன் குறித்தும் மற்ற தேவர்கள் குறித்தும் அவர்தம் உலகு, அமுதம் போன்ற செய்திகளும் உள்ளன. இந்திரனைக் குறித்துப் பேசும் போது புறநானூற்றின் 241 வது பாடலில் 'வஜ்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுள், போர்புறு முரசும் கறங்க' எனும் வரிகளால் இந்திரன் குறித்தும், அவர் வாழும் மேலுலகம் குறித்தும் பாடுகின்றார் ஆயை உறைச்சேரி முடமோசியார் எனும் புலவர். இவ்விடத்தில் இந்திரன் வஜ்சிரத்தை ஆயுதமாகக் கொண்டவன் என்பதுவும், அவனது திருக்கோவில் எனப்படுகின்ற மேலுலகத்தில் ஒலிக்கின்ற முரசானது இடியோசையாக மாறி முழங்குகின்றது என்றும் குறிப்பிடுகின்றார்.

ஔவையார் பாடிய புறநானூற்றின் 99வது பாடல் அதியமானைப் புகழ்ந்து பாடும் வண்ணம் அமைந்துள்ளது. அவ்வகையில் அதியமானின் முன்னோர்கள் தேவர்களை வணங்குபவர்கள் என்றும், அவ்வானவர்களுக்கு அவிர்பாகம் (யாகத்தின் மூலம் தேவர்களுக்கு அளிக்கப்படும் உணவு) தந்தும், விண்ணவர்களுக்கே உரியதாக இருந்த அரிய கரும்பை பூவுலகத்திற்குக் கொண்டு வந்த பெரும் சிறப்புக்குரியவர்கள் எனப் புகழ்கிறார். இதன் வழி அதியமானின் மரபு என்பது மிகவும் உயர்ந்த பண்பட்ட மரபாகக் காட்டப்பட்டுள்ளது. அம்மரபினர் ஆற்றிய அரும்பணிகள் போல இவனின் அரிய பல செயல்களைப் பாடுவதற்கு அரியனவாகப் பாடும் புலவரின் அறிவு எல்லையைக் கடந்தவனாக விளங்குவதாக ஔவையார் பாடுகிறார். இவ்விடத்தில் மரபு வழி தேவர்களை வணங்கும் இவனது முன்னோர்கள், தேவார்களின் அருளால் விண்ணவர்க்கே உரிய அரிய கரும்பை மண்ணுலகுக்கு அறிமுகப்படுத்தும் பேறு பெற்றனர் என்பதும் அத்தகைய மரபுப் பின்புலமானது அதியமனுக்கு அரிய செயல்களைச் செய்வதற்குரிய ஆற்றலை அளித்தது என்பதாகக் கூட இச்செய்தியை ஆழ்ந்து உணரலாம்.

இதுவல்லது தேவர்களுள் ஒருவராகக் கொள்ளப்படும் எமனைப் பற்றியும் புறநானூறு கூறுகிறது. இடைக்காடனார் பாடிய புறநானூற்றின் 42வது பாடலில் கிள்ளிவளவனின் ஆற்றலையும் கோபத்தையும் கூற்றுவனோடு ஒப்பிட்டுக் கூறப்படுகின்றது. நீ கூற்றுவனைப் போலச் சினத்துடன் விளங்குகிறாய் என்பதிலிருந்து கிள்ளிவளவனின் கொடிய சினம் பகைவரை வெல்லாமல் தணிவதில்லை என்பதைப் புலவர் குறிப்பிடுகிறார் எனலாம். இவ்விடம் கூற்றுவன் கொண்ட முடிவினைப் போலவே கிள்ளிவளவன் கொண்ட எண்ணத்தையும் எந்தப் பகைவராலும் தவிர்க்க இயலாது என்பதாகப் பொருள்படுகிறது.

பிறிதொரு பாடலில் மறோக்கத்து நப்பசலையார் எனும் புலவர் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனின் உயிரைப் பறித்த கூற்றுவனைக் குறித்து கூறும் கருத்து அமைந்துள்ளது. மிகப்பெரிய வீரத்திற்குரிய இச்சோழனின் உயிரைப் பறித்தல் பொருட்டு கூற்றுவன் அவன் முன் எதிர்த்து நின்றிருந்தால் நிச்சயமாக கூற்றுவன் பிழைத்திருக்க முடியாது. எனவே இந்தக் கூற்றுவன் இச்சோழன் முன் புலவர் போல் தோன்றி தொழுது வணங்கி வாழ்த்தி இரந்துதான் அவனுடைய உயிரைப் பெற்றுச் சென்றிருக்க வேண்டும் என்பதாகக் கூறுகிறார்.

இதுபோலவே புறநானூற்றின் 19வது பாடலில் போர்க்களத்தில் வீரமரணம் எய்திய தம் புதல்வர்களைக் கண்ட மறக்குல மகளிர் தம் மக்களின் வீரமரணத்தை வெற்றியாக ஏற்று நெகிழ்ந்து அழுததைக் கண்ட கூற்றுவன் நாணமுற்றான் எனும் கருத்து காட்டப்படுகின்றது. இத்தகைய வீரர்களின் உயிரைப் பறித்துச் செல்வது தமக்கு அழகல்ல என நினைத்து எமன் நாணுவதாகக் கூறப்படுகின்றது.

இதற்கும் மேலாக, உலகின் நிலையற்ற தன்மையை உணர்ந்தவன், நிலையான புகழைப் பெறவேண்டி பல நன்மைகள் செய்தவன், அந்தணர்களுக்குப் பரிசில் பல தந்தவன், பிறர் பொருள் துயர் தீர்த்தவன், புலவர்களுக்குப் புரவலனாக இருந்தவன், பாடிணி பாணர் இவர்களுக்குக் குறைவில்லாது பொருள் கொடுத்தவன், பிறர் இகழ்வதற்குரிய காரியங்களைச் செய்யாதவன், கூற்றம் வரும் என்பதை கூற்றுவனின் வரவைக் கண்டு கூட அஞ்சுவதில்லை என்பதாகப் பாடிய புலவரின் பெயர் அறியப்படாத புறநானூற்றின் 361வது பாடல் குறிப்பிடுகின்றது. இதன் மூலம் கூற்றுவன் என்பது இயற்கையான ஒன்று. ஆனால் அவன் வருவதற்குள் நல்லனவற்றையெல்லாம் செய்து சிறப்படைந்தோன் அக்கூற்றுவனைக் கண்டு அஞ்சுவதற்குரிய எந்தக் காரணமும் இல்லை என்பதை உணர்த்துவதாக இப்பாடல் அமைகிறது.

கருட புராணத்தின் செய்தியின்படி எமனின் சபையில் புண்ணிய ஆன்மாக்கள் சென்றடையின் அவனது தோற்றமும், ஏவலர்களும், சபையும் பொலிவு மிகுந்து இனியதாகக் காட்சி அளிக்கும் என்றும் மாறாகப் பாவ ஆத்மாக்கள் அவ்விடம் செல்லும் போது கூற்றுவன் உலகு மிகவும் பயங்கரமானதாகக் காட்சி அளிக்கும் என்பதாகச் சொல்லுகின்றது (கருட புராணம்). எனவே மேற்கூறிய பாடலின் தலைவன் புண்ணிய ஆத்மாவாகக் காட்டப்படுவதால் கூற்றுவனின் வரவு பயமுறுத்துவதாக அமையாது என்பதாகப் பொருள் கொள்ள வாய்ப்புண்டு.

இதன் அடிப்படையில் கூற்றுவன் குறித்த நம்பிக்கையும் பழந்தமிழர் மத்தியில் இருந்தது என்பது கூற்றுவன் உயிரைக் கூறுபோட முடிவு செய்து விட்டால் அதனை யாராலும் மாற்ற முடியாது எனும் நம்பிக்கையையும் கொண்டிருந்தனர் என்பது தெரிகிறது. உயர்வு நவிற்சி காரணமாக இக்கூற்றுவனே நாணுவதாகவும் பணிந்து உயிரைக் கவர்ந்ததாகவும் கூறப்படும் செய்திகளைக் கொள்ள வேண்டும்.

மேலும், அறக்கடவுளின் முடிவு எந்த நிலையிலும் பிழைபடாததாக நடுநிலையோடு செயல்படுவதால் அது போலவே அரசனின் செங்கோலும் நீதி தவறாது வலுப்பெற வேண்டும் எனும் கருத்தில் அமையும் வரிகளைப் புறநானூற்றின் 35வது பாடலின் 'அறம் புரிந்தன்ன செங்கோல் நாட்டத்து' எனும் வரியில் காண முடிகின்றது.

இதுவல்லாது தேவர்களின் உயரிய எல்லாக் காலத்தும் அமரர் தன்மையை அளிக்கும் அமுதம் குறித்த செய்திகளும் புறநானூற்றில் காணப்படுகின்றன. பாண்டிய மன்னன் கடளுள் மாய்ந்த இளம்பெருவழுதி, பெரியோர்களின் மேன்மையை உயர்ந்து பாடுவதாகப் புறநானூற்றின் 182வது பாடல் அமைகிறது.

உண்டால் அம்ம, இவ் உலகம்இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், 'இனிது' எனத்
தமியர் உண்டலும் இலரே...

தவப்பயன் காரணமாகவோ தெய்வத்தின் தயவாலோ, அமிழ்தம் எனப்படும் தேவர்களது அரிய உணவு தமக்குக் கிடைத்தாலும் அதனை அவர்கள் தனித்து உண்ணும் சிறுமை உடையவர்கள் அல்லர்; மாறாக அதன் பலன் கருதிப் பகிர்ந்துண்ணுவர் எனும் கருத்தில் இப்பாடல் அமைவதைக் காண்க.

இது போலவே, ஊண்பொதி பசுங்குடையாரின் பாடலின் (புறம் 10) சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னியின் குலமகளிர் சமைத்து விருந்தினருக்குப் படைத்து மகிழும் உணவின் சுவையானதைச் சுட்ட வந்த புலவர் அது அமிழ்தினும் சுவையானது என்பதாகக் குறிப்பு வருகிறது. புறநானூற்றின் 361வது பாடலிலும் அமுதம் குறித்து உவமையாகக் கூறப்பட்டுள்ளது. இப்பாடலின் 19வது வரியில் 'அமிழ்தென மடுப்ப மாந்தி இகழ்விலான்' புலவர் காதலி தரக்கூடிய மதுவானது அமுதினுக்கு ஈடாக உள்ளதாக உவமை கூறுவதாக அமைந்துள்ளது. அதுபோலவே பிரிதொரு பாடலிலும் (புறம் 125) இறைச்சியோடு சேர்ந்து உண்ணப்படும் கள் அமிழ்தமாகச் சுவைப்பதாகக் கூறி அது அமுதத்தின் தன்மையைப் போலவே தேர்வன் மலையனுக்கு நீண்ட ஆயுளை நல்க வேண்டுமென்று வாழ்த்து முகமாக வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் பாடுகின்றார்.

பழந்தமிழரிடத்தே சுவர்க்கம் குறித்த நம்பிக்கையுமிருந்துள்ளது அறியப்படுகின்றது. இறந்தோர் சுவர்க்கம் புகுதலே மிகச் சிறந்த நிலையாகப் புறநானூறு குறிப்பிடுகின்றது. அதிலும் வீரமரணம் எய்தியோர் புகழ் உடம்பு பெற்றுச் சுவர்க்கம் சேருகின்றனர் எனும் கருத்தும் தமிழரிடையே இருந்திருக்கிறது. இவ்வாறு சுவர்க்கம் எனக் குறிப்பிடப்படுவதை மிகவும் உயர்ந்ததொரு சிறப்பான இடமாகவும், உலகில் சிறந்தோர்க்கு மட்டுமே அங்கே இடம் கிடைக்கும் எனும் நம்பிக்கையும் தமிழரிடம் இருந்தது தெரிகிறது.

இது தவிர, சுவர்க்கம் எல்லா விதமான வசதிகளும் அழகும் முடிவில்லா மகிழ்ச்சியையும் தரவல்ல இடமாகப் பழந்தமிழர் எண்ணம் கொண்டிருந்தனர் என்பது குறுங்கோழியூர் கிழார் பாடிய புறநானூற்றின் 21வது படலின் வழி தெரிய வருகிறது. இப்பாடலில் சேரமான் யானைகோட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையின் சிறப்புகளைப் பாட வந்த புலவர் இம்மன்னனால் போற்றிப் பேணிக் காக்கப்பட்ட நாடு வசதியாலும் அமைதியாலும் இன்ன பிற சிறப்புகளாலும் தேவருலகை ஒத்திருப்பதாகப் பலரும் கூறக் கேட்டதாகக் கூறி, அதன் உண்மையை நேரில் கண்டு களித்த பெருமையைச் சொல்லி இவ்வரசனுக்கு வாழிய பாடுகிறார்.

ஆவூர் முழங்கிழார் படிய புறநானூற்றின் 38வது பாடலில் சுவர்க்கத்தில் இருக்கின்ற எல்லாச் சிறப்புகளையும் பெற்று விளங்கும் அப்புரவலனின் நாட்டைப் போற்றுகிறார்.

தேவருலகில் கேட்டதைக் கொடுக்கும் கற்பகத் தரு போல இவ்வரசனும் மக்களுக்கும் புலவர்களுக்கும் தேவையான அனைத்தையும் தரக்கூடிய வல்லமை பெற்றவன் என்பதாகக் கூறுகின்றார். சுவர்க்கத்தில் பரிசில் வேண்டிச் செல்வாரும் அப்பரிசிலை கொடுக்கும் புரவலரும் இருக்கும் மரபு இல்லை. சுவர்க்கத்திற்குச் செல்வதைக் காட்டிலும் இவன் நாட்டிற்கு வருவது மேன்மையுடையதாகப் புகழ்ந்து பாடுகிறார் புலவர். இவ்விடம் சுவர்க்கம் எல்லா நிலைகளிலும் இன்பமுடைத்ததாகவும், அனைத்தையும் தரக்கூடியக் கற்பகத்தரு அங்கே இருப்பதாகவும் தமிழர் நம்பிக்கை கொண்டுள்ளது இப்பாடலால் அறிய முடிகின்றது.

போர்க்களத்தில் வீரமரணம் அடைவாரும் சுவர்க்கம் புகுவார் எனும் நம்பிக்கையும் தமிழரிடத்தில் நிலவி வந்துள்ளது புறநானூற்றின் வழி அறியப்படுகின்றது. புறநானூற்றின் 93வது பாடலில் போர்க்களத்தில் தோல்வி கண்டு புறமுதுகு காட்ட வேண்டிய நிலை ஏற்பட்ட மன்னர்கள், வீரர்கள் கூட இறுதியில் வீரமரணம் உற்றதாகவே கருதப்பட்டு, வீர சுவர்க்கம் அடைய வேண்டி அவர்களுக்கு இறுதிக் கடன்கள் செய்யப்பட்ட செய்தியைக் காண முடிகின்றது. இப்பாடலில் தோல்வியைத் தழுவிப் புறமுதுகு காட்ட வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்ட மன்னர்கள் தானாய் வீரசுவர்க்கம் அடையும் வாய்ப்பு இழந்து சிறுமையுற்றனர். இவ்வாறு தானே போர்க்களத்தில் வீரமரணம் அடையும் சிறப்பை அடையாதவர்கள் நோயினால் மரணமடையும் நிலையில் அவர்களின் மார்பினில் வடு உண்டாக்கி அவர்களும் வீரர்கள் அடையும் சுவர்க்கத்தைச் சென்றடைய அந்தணர் சடங்குகள் செய்தனர் எனும் குறிப்பு பெறப்படுகின்றது.

சங்க காலத்தில் புலவரால் பாடப்பட்டோர் புகழடைந்தவராகவும் அன்னவர் சுவர்க்கம் புகுவார் என்ற நம்பிக்கையும் இருந்துள்ளது. இந்நம்பிக்கையானது ‘வலவன் ஏவா வானவூர்தி எய்துப’ (புறம் 27) எனும் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் வரிகளால் உறுதிப்படுகிறது. மாறாகப் புலவர்களால் பாடப்படும் புகழ் இல்லாதவருக்கு மேலுலகு இல்லை என்பதையும் ‘இவணிசை உடையோர்க்கு அல்லது அவணது உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை’ (புறம் 50) எனும் மோசி கீரனார் பாடல் வரிகளால் விளங்கப் பெறலாம்.

## முடிவுரை

சங்க இலக்கியங்களுள் தனித்துவம் மிக்க புறநானூற்றில் சங்ககால மக்களின் வழிபடு கடவுள்களைப் பற்றிய அரிய தகவல்கள் விரவிக்கிடக்கின்றன என்பது இந்த ஆய்வின் வழி அறியப்படுகின்றது. சிவபெருமான், முருகக்கடவுள், திருமால், இந்திரன், தேவர்கள், தேவருலகம் பற்றிய கூற்றுகள் பல வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் சங்ககாலப் புலவர்களால் சுட்டப்பட்டிருப்பது அக்கால மக்களிடையே இருந்த தெய்வ நம்பிக்கைக்குச் சான்று பகர்கின்றது. அதே வேளையில் அக்கடவுளர்களைப் பற்றிய சிறப்புகளும், புராண இதிகாசக் கூறிப்புகளும் கூட பாடல்வரிகளில் எடுத்தாளப் பட்டிருப்பது அக்கடவுளர்களின் தனித்துவத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளது எனலாம். அதோடு அக்கால மக்களிடையே புராண இதிகாசங்களைப் பற்றிய அறிவும் இருந்துள்ளது என்பதுவும் இதன் வழி பெறப்படும். இவற்றோடு சுவர்கம் நரகம் போன்ற நம்பிக்கைகளும், தேவருலகில் உள்ள கட்பகவிருட்சம், அமுதம் போன்றவற்றைப் பற்றிய நம்பிக்கைகளும் இவர்களிடத்தே மிகுந்திருந்ததையும் கடவுள் வழிபாட்டில் இவர்களுக்கு ஆழ்ந்த ஞானம் இருந்ததையும் சுட்டுவதாக உள்ளது.

புறநானூற்றுப் பாடல்களில் இந்த ஆய்வில் சுட்டப்பட்ட பெருங்கடவுளர்களின்

வழிபாடுகள் மட்டுமன்றி குலதெய்வ வழிபாடு, நடுகல் வழிபாடு, பத்தினித்தெய்வ வழிபாடு, பேய்கள் குறித்த நம்பிக்கைகள், சோதிட நம்பிக்கைகள், சகுண சடங்குகள் குறித்த நம்பிக்கைகள் போன்ற பல்வேறு தகவல்கள் உள்ளன. இவை அனைத்துமே பழந்தமிழரின் ஒட்டுமொத்த இறைநம்பிக்கைக்கும் பிற நம்பிக்கைகளுக்கும் சான்று பகர்வனவாக அமையும் என்பது திண்ணம்.

## References:


Albert Sebeok, Thomas. (1994). Sign: An Introduction To Semiotics. London: Toronto Buffalo.

Bailey, D., Kenneth. (1978). Method Of Social Research. London: Collier Macmillan Publishers.

Gnanasambanthan, A.,Sa. (1955). Akamum Puramum. Chennai: Pari Nilayam.

Innis, E., Robert. (1985). Introduction. In E., Innis Robert (Ed.), Semiotics: An Introductory Anthology. (pp. vii-xvi). Bloomington: Indiana University Press.

Kailasapathi. (1973). Tamil Heroic Poems. Thenninthiya South India Saiva Siddhanta Works Pub. Society.

Kali Prasad Goswami. (1998). Kamakhya Temple: Past and Present. New Delhi: APH Publishing.

Karuda Puranam.

Lawrance W., Neuman. (2007). Basics Of Social Research Qualitative And Quantitative Approaches. USA: Pearson.

Manikkam, Va., Suba. (1989). Sanga Neri. Chennai: Manivasagar Pathipagam.

Merrian, B., Sharan. (2009). Qualitative Research A Guide To Design And Implementation. San Francisco: A Wiley Imprint.

Nadarajah. (1983). “Kman in Tamil Classical Poetry.”, Jurnal Pengajian India. (Vol.1 & pp. 73-88). KDN 0911/83.

Nazir Ali, (2016). “The Purananuru and the Tamil Concept of Valour.”, Bharatiya Pragna: An Interdiscipli nary Journal of Indian Studies. (Vol. 1 & pp.30). www.indianstudies.net/v1n3 - PDF: http:// www.indianstudies.net//V1/n3/v1n3s204.pdf

Puranaanoorrus Sotpozhivukal . (1944). Perasiriyar Panniruvar Sorpolivugal. Thirunelveli: Thenninthiya South India Saiva Siddhanta Works Pub. Society.

Puranaanuuru.

Rajantheran, M and Silllalee, K. (2015) “Sangath Tamilarin Manam Katha Viiram.”, Journal of Tamil Peraivu. (Vol.1 & pp. 7-15). ISSN 2289-8379.

Rajantheran, M and Silllalee, K. (2015) “Sangath Tamilarin Manam Katha Viiram.”, Journal of Tamil Peraivu. (Vol.2 & pp. 25-36). ISSN 2289-8379.

Rajantheran, M. (2014). Puranaanuuru. Chennai: Kalaignaan Pathipagam.

Sabitha Marican. 2005. Kaedah Penyelidikan Sains Sosial. Petaling Jaya: Pearson/Prentice Hall.

Salini Ilanthirayan. (1995). Sangath Tamilarin Manithaneya Maninerigal. Chennai: International Institute of Tamil Studies.

Thatchinamurthy, A. (2008). Thamilar Naagarigamum Panbaadum. Chennai: Yaal Veliyidu.

Thevapupathi Nadarajah. 2011. Murugan Vazhipadu. Kuala Kumpur: Malaysia Ilangai Saivar Sangam.

Thevaram.

Tholkappiyam.

Varatharasan, Mu. (1992). Tamil Ilakiya Varalaru. New Delhi:Sahitya Akademi.